மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனைக்கு சராசரியாக ஒரு நாளைக்கு 169 நபர்கள் வெளி நோயாளிகளாகவும், மாதம் ஒன்றுக்கு 44 உள் நோயாளிகளும் வருகிறார்கள்; மாதம் ஒன்றுக்கு 10 பிரசவங்கள் மட்டும் நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எதிர்வருகின்ற காலங்களில் துறையின் மூலமாக ஆய்வு செய்து, அந்தப் பகுதியினுடைய தேவைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடம் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருந்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் என்னுடைய ஆய்வில் உள்ளது. (குறுக்கீடு) அதெல்லாம் என்னுடைய ஆய்விலே உள்ளது. என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை, அது என்னுடைய ஆய்விலே உள்ளது. என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.*

திரு. எல். வெங்கடேசன்: *நான் அதைக் கொடுத்து நான்கு நாட்கள் ஆகிவிட்டன.*

2013 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, எத்தனை நாட்களானாலும் பரவாயில்லை. அது என்னுடைய ஆய்விலே உள்ளது. (குறுக்கீடு) நீங்கள் அதை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். Time limit எல்லாம் சொல்லி என்னிடம் கேட்க முடியாது. (குறுக்கீடு) இல்லை, அதற்கு time எல்லாம் கிடையாது. அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. அதற்குத் துறையிலேயிருந்து பதில் வந்தவுடன், அது எடுத்துக்கொள்ளப்படும். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இதுபோன்றெல்லாம் பேச முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

3. அரசினர் தனித் தீர்மானம்

கச்சத் தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைத் தனது ஆளுகையின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

முற்பகல் 11—20

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள இராமேஸ்வரத்திலிருந்து 10 மைல் தொலைவில் 285 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தீவு கச்சத் தீவு. இருபதாம் நூற்றாண்டில் இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த சீனிகுப்பன் படையாச்சி என்பவர் இந்தத் தீவில் புனித அந்தோணியார் தேவாலயத்தை அமைத்தார். இங்கு ஆண்டுதோறும் திருவிழா நடைபெறுவது வழக்கமாக உள்ளது. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு வரை இராமநாதபுரம் சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக கச்சத் தீவு இருந்ததற்கான வரலாற்று ஆவணங்கள் உள்ளன. சுதந்திரம் அடைந்த பின்பு, ஜமீன் முறை ஒழிக்கப்பட்டு, இராமநாதபுரம் சமஸ்தானத்தில் இருந்த கச்சத் தீவு இந்திய நாட்டுடன் இணைக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு இந்தியா—இலங்கை ஒப்பந்தம் ஏற்படும் வரை தமிழக மீனவர்கள் பாக்ஜலசந்தி பகுதியில், கச்சத் தீவு பகுதியில் மீன்பிடித்து வந்தனர். வலைகளை உலர்த்தவும், ஓய்வெடுக்கவும் கச்சத் தீவினைப் பயன்படுத்தி வந்தனர். 1974 ஆம் ஆண்டு இந்தியா—இலங்கை ஒப்பந்தத்திலும் பாரம்பரிய மீன்பிடி உரிமைகள்